

குரங்கு அம்மை சிறப்பு வார்டு தயார்

MONKEYPOX WARD

► கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் குரங்கு அம்மை நோய்க்கு சிகிச்சை அளிக்க புதிதாக வார்டு அமைக்கப்பட்டுள்ளது.

கோவை அரசு மருத்துவமனை டீன் தகவல்

கோவை, ஆக. 23: கோவை அரசு மருத்துவமனையில் குரங்கு அம்மை சிறப்பு வார்டு தயார் நிலையில் இருப்பதாக மருத்துவமனையின் டீன் நிர்மலா தெரிவித்தார்.

ஆப்பிரிக்கா, ஐரோப்பிய உள்பட 116 நாடுகளில் குரங்கு அம்மை பாதிப்பு பரவியுள்ளது. மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோவில் அதிகளவில் பரவல் இருக்கிறது. இதனால், உலக சுகாதார நிறுவனம் பொது சுகாதார அவசர நிலையை கடந்த 14ம் தேதி அறிவித்தது. இதையடுத்து, ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சகம் இந்தியாவில் குரங்கு அம்மை பாதிப்பு பரவுவதை தடுக்கும் வகையில் கண்காணிப்பு பணியை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் குரங்கு அம்மை பாதிப்பை தடுக்க சுகாதாரத்துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கோவை விமான நிலையத்திற்கு வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு குரங்கு அம்மை தொற்று நோய் அறிகுறிகள் இருக்கிறதா? என சுகாதாரத்துறையினர் பரிசோதனை செய்து வருகின்றனர். விமான நிலையத்தில் பயணிகளின் உடல் வெப்பத்தை பரிசோதிக்கும் அமைப்பு நிறுவப்பட்டு மருத்துவர்கள், கள பணியாளர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை வெளிநாட்டில் இருந்து கோவை திரும்பிய பயணிகளுக்கு குரங்கு அம்மை பாதிப்பு கண்டறியப்படவில்லை என அதிகாரிகள் தரப்பில் தெரிவித்துள்ளனர்.

மேலும், சுகாதாரத்துறையின் உத்தரவின் பேரில் கோவை அரசு மருத்துவமனையில் 10 படுக்கை வசதியுடன் கூடிய குரங்கு அம்மைக்கான சிறப்பு வார்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. சொறி, காய்ச்சல், தொண்டை புண், தலைவலி, தசை வலி, முதுகு வலி, உடல் பலவீனம், வீங்கிய நிணநீர் ஆகியவை குரங்கு அம்மை நோய் அறிகுறியாகும். தொற்று பாதிக்கப்பட்டவருடன் நேரடி தொடர்பில் இருந்தால் மட்டுமே இது பரவும். தொற்று பாதித்த முதல் 4 வாரங்களில் குணமாகிவிடும். பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்தி வைக்க வேண்டும் என சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது குறித்து கோவை அரசு மருத்துவமனை டீன் நிர்மலா கூறுகையில், “கோவை அரசு மருத்துவமனையின் பழைய அவசர சிகிச்சைப்பிரிவு கட்டிடத்தில் குரங்கு அம்மை சிறப்பு வார்டு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த வார்டில் 10 படுக்கைகள் உள்ளது. அரசு சார்பில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் பேரில் மருந்துகள் இருப்பில் உள்ளது. டாக்டர்கள், நர்சுகள் குரங்கு அம்மை பாதிக்கப்பட்டவர்கள் வந்தால் சிகிச்சை அளிக்க தயார் நிலையில் உள்ளனர். இதுவரை யாரும் குரங்கு அம்மை வார்டில் அட்மிட் செய்யப்படவில்லை” என்றார்.

மாவட்டத்தில் பொதுத்தேர்வில் தேர்ச்சி அதிகரிக்க

அரசு, அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுடன் ஆலோசனை

கல்வித்துறையினர் நடவடிக்கை

► கோவை மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பொதுத்தேர்வில் மாணவர்கள் தேர்ச்சியை அதிகரிக்க முதுகலை ஆசிரியர்களுடன் கல்வித்துறை அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

கோவை, ஆக. 23: கோவை மாவட்டத்தில் கடந்த ஆண்டு நடந்த பிளஸ்-2 பொதுத்தேர்வை 114 அரசு பள்ளிகளை சேர்ந்த 8,232 மாணவர்கள் தேர்வு எழுதினர். இவர்களில், 7,685 பேர் தேர்ச்சி அடைந்தனர். தேர்ச்சி சதவீதம் 93.36 ஆகும். 11 அரசு பள்ளிகள் நூறு சதவீத தேர்ச்சி பெற்றது. 64 அரசு பள்ளிகள் 90 சதவீதத்திற்கு மேல் தேர்ச்சி அடைந்தது. மாநில அளவில் 4வது இடத்தை பிடித்தது. மேலும், பிளஸ்-1 பொதுத்தேர்வை 35 ஆயிரத்து 628 பேர் தேர்வு எழுதினர். இவர்களில், 15 ஆயிரத்து 546 மாணவர்கள், 18 ஆயிரத்து 664 மாணவிகள் என மொத்தம் 34 ஆயிரத்து 210 பேர் தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி சதவீதம் 96.02 ஆகும். பிளஸ்-1 பொதுத்தேர்வில் மாநில அளவில் முதலிடம் பிடித்தது.

இந்நிலையில், மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் நடவடிக்கை எடுத்து வருகிறார். இதன் ஒரு பகுதியாக, மாவட்டத்தில் அரசு, அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் பிளஸ்-1, பிளஸ்-2 பொதுத்தேர்வில் 90 சதவீதம் கீழ் தேர்ச்சி விழுக்காடு பெற்ற முதுகலை ஆசிரியர்களுடன் கல்வித்துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, தமிழ், ஆங்கிலம் பாடப்பிரிவு ஆசிரியர்களுக்கான ஆலோசனை கூட்டம் ஏற்கனவே நடத்தி முடிந்த நிலையில், நேற்று இயற்பியல் மற்றும் பொருளாதாரம் பாடப்பிரிவு முதுகலை ஆசிரியர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. இந்த கூட்டம், கோவை புனித காணிக்கை மேல்நிலைப்பள்ளி மற்றும் சிஎஸ்ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்பட்டது. இதில், மாவட்ட கல்வி அலுவலர் பொறுப்பு மற்றும் முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் கலந்துகொண்டனர்.

அவர்கள், முதுகலை ஆசிரியர்கள் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து மாணவர்களும் தேர்ச்சி அடைய கூடிய மதிப்பெண்களை எடுக்க வழிவகை செய்ய வேண்டும். பிளஸ்1-ல் தோல்வியடைந்த மாணவர்கள் துணைத்தேர்வில் வெற்றி பெறவில்லையென்றால், அவர்களை வெற்றி பெற வைக்க வேண்டும். தொடர்ந்து அந்த மாணவன் பிளஸ்-2 வகுப்பில் தேர்ச்சி அடைய தேவையான உதவிகளை வழங்க வேண்டும். காலை, மாலை, விடுமுறை நாட்களில் சிறப்பு வகுப்புகள் நடத்த வேண்டும்.

வாரத்திற்கு 3 சிறப்பு தேர்வுகளை நடத்தி கோப்புகளை சேகரித்து வைக்க வேண்டும். காலாண்டு தேர்வுக்கு பின் அதனை மீளாய்வு கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும். காலாண்டு தேர்வுக்கு பின் தேர்ச்சியை அதிகரிக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுத்தேர்வில் மாணவர்களின் தேர்ச்சியை அதிகரிக்க முதன்மை கல்வி அலுவலர் அறிவுறுத்தி உள்ளார். அதனை அனைவரும் பின்பற்ற வேண்டும் என தெரிவித்தனர். மேலும், ஆசிரியர்கள் பாடப்புத்தகங்களுடன் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர். தொடர்ந்து, வேதியியல், வணிகவியல், வரலாறு, கணிதம், உயிரியியல், கணினி அறிவியல் உள்ளிட்ட பாடங்களின் முதுகலை ஆசிரியர்களுடன் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட உள்ளது.

அனுமதியின்றி டிரோன் பயன்படுத்தினால் நடவடிக்கை

போலீசார் எச்சரிக்கை

கோவை, ஆக.23: கோவை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் டிரோன் ஆபரேட்டர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. இதில் சுமார் 60 உரிமையாளர்கள் மற்றும் ஆபரேட்டர்கள் கலந்து கொண்டனர். இதில் போலீசார் பல்வேறு ஆலோசனைகள், உத்தரவுகள் வழங்கப்பட்டது. கோவை மாநகர பகுதிகளில் டிரோன் (ஆளில்லாத குட்டி விமானம்) பயன்படுத்தும் நபர்கள், நிறுவனங்கள் குறித்து கண்டறியப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் டிரோன் விதிகள் 2021 ன் படி டிரோன் பயன்படுத்தும் அனைவரும் டிஜிட்டல் ஸ்கை என்ற சமூக வலைதள பக்கத்தில் பதிவு செய்து யுனிக் எண் பெற்றிருக்க வேண்டும். மேலும், டிரோன் இயக்கத்திற்கு முறைப்படி பயிற்சி பெற்ற பைலட் மட்டுமே இயக்க வேண்டும். பயிற்சி பெற்றவர்களும் வலைதளத்தில் பதிவு செய்து அனுமதி பெறவேண்டும். மாநகர பகுதிகளில் இதுவரை 57 டிரோன்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. மாநகர பகுதிகளில் பதிவு செய்யாத நபர்கள் டிரோன் பயன்டுத்துவதாகவும், அனுமதி பெற்ற பைலட் அல்லாத நபர்கள் டிரோன்களை பயன்படுத்துவதாகவும், இயக்குவதாகவும் தெரிய வருகிறது.

எனவே டிரோன் உரிமையாளர்கள், இயக்குபவர்கள் அனைவரும் டிஜிட்டல் ஸ்கை என்ற வலைதளத்தில் முறைப்படி பதிவு செய்து அனுமதி பெற அறிவுறுத்தப்படுகிறது. உரிமம் பெறாமல் செயல்படும் டிரோன்கள் போலீசாரால் பறிமுதல் செய்யப்படும். உரிமம் இல்லாத டிரோன் பைலட்கள் மீதும் உரிமையாளர்களின் மீதும் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அரசு சில பகுதிகளை ரெட், எல்லோ ஜோன் என அறிவித்து டிரோன்கள் பறப்பதற்கு தடை விதித்துள்ளது. இது குறித்த விபரங்களை டிஜிட்டல் ஸ்கை மேப் மூலம் அறியலாம்.

திருமணம், திருவிழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு டிரோன்கள் பயன்படுத்த முறைப்படி போலீசில் அனுமதி பெறவேண்டும். பயன்படுத்தும் டிரோன், இயக்குபவர் விபரம், பறக்கும் நேரம், உயரம் குறித்து முறைப்படி தெரிவித்து அனுமதி பெற வேண்டும். அனுமதி பெறாமல் பயன்படுத்தும் நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாநகர போலீசார் தெரிவித்துள்ளனர்.

ஒடையக்குளம் கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்க தேர்தல்

► பொள்ளாச்சி சப்-கலெக்டர் அலுவலகத்தில் நேற்று, கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்க தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நடைபெற்றது.

பொள்ளாச்சி, ஆக.23: பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை அருகே பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள குளப்பத்துக்குளம் ஏரி மற்றும் வரத்து வாய்க்கால் ஒடையக்குளம் கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர்கள் மற்றும் ஆட்சி மண்டல தொகுதிகளின் உறுப்பினர்கள் ஆகிய பதவிகளுக்கான தேர்தல் நடத்த மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் பாடி உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி நேற்று, நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் ஆட்சி மண்டல தொகுதிகளின் உறுப்பினர்கள் பதவிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. இதற்கான வேட்பு மனு தாக்கல் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது.

இதையடுத்து, இன்று 23ம் தேதி காலை 9 மணி முதல் 2 மணிக்குள் வேட்பு மனுக்களின் பட்டியல் வெளியிடப்படுகிறது. பகல் 2 மணி முதல் 4 மணிக்குள் வேட்பு மனுக்களை திருப்பி பெற அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

31ம் தேதியன்று காலை 7 மணி முதல் 3 மணி வரை, நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர்கள் மற்றும் ஆட்சி மண்டல தொகுதி உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. பின் மாலை 4 மணியளவில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுவதுடன், அதன் முடிவும் அறிவிக்கப்படுகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் 5 ஆயிரம் அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள் விநியோகம்

கோவை, ஆக.23: தமிழக அரசு பள்ளிகளில் மேல் நிலை வகுப்பு படித்து வரும் மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இது மாணவிகள் தங்களின் பள்ளி கல்வியை தொடர ஊக்குவிக்கும் வகையில் கடந்த 2001-ம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை அடுத்து தமிழ்நாட்டின் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகள், பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் பிளஸ்-1 படிக்கும் மாணவ, மாணவர்களுக்கு திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டிற்கான சைக்கிள்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நிலையில், மாநிலம் முழுவதும் சைக்கிள்கள் மாணவர்களுக்கு வழங்கும் பணிகள் நடந்து வருகிறது. அதன்படி, கோவை மாவட்டத்தில் உள்ள 156 அரசு, அரசு உதவிப்பெறும் மேல்நிலைப்பள்ளிகளை சேர்ந்த மாணவர்களுக்கு நடப்பாண்டிற்கான சைக்கிள்கள் வழங்கப்படுகிறது. இதற்காக சைக்கிள்கள் பாகங்கள் அனைத்தும் பொருத்தப்பட்டு மாணவர்களுக்கு வழங்க பல பள்ளிகளில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த கல்வியாண்டில் படித்த மாணவர்கள் சிலருக்கு சைக்கிள்கள் வழங்கப்படாமல் இருந்தது. இதையடுத்து, விடுப்பட்ட மாணவர்களுக்கு முதலில் சைக்கிள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது பள்ளிகளின் மூலம் சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தற்போது வரை 5 ஆயிரம் மாணவர்களுக்கு இலவச சைக்கிள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

தற்போது, வழங்கப்பட்டுள்ள சைக்கிள்கள் தரமாக இருப்பதாக மாணவர்கள் தரப்பில் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கல்வித்துறை அதிகாரிகள் கூறியதாவது: கோவை மாவட்டத்தை சேர்ந்த அரசு பள்ளி, அரசு உதவிப்பெறும் பள்ளிகளை சேர்ந்த 15 ஆயிரம் மாணவர்களுக்கு நடப்பாண்டில் சைக்கிள்கள் வழங்கப்பட உள்ளது. இந்நிலையில், கடந்த ஆண்டு சில மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்படவில்லை. தற்போது, இதுபோன்ற விடுபட்ட மாணவர்களுக்கும் சைக்கிள்கள் வழங்கும் பணிகள் நடந்து வருகிறது. தற்போது வரை 5 ஆயிரம் மாணவர்களுக்கு பள்ளிகளின் மூலமாக சைக்கிள்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பள்ளிகளுக்கு அலார்ட் செய்யப்பட்டுள்ள சைக்கிள்கள் அனைத்தும் சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவை, மாணவர்களுக்கு வழங்க தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் சைக்கிள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

நாளை தினகரன் நாளிதழுடன்
ஆன்மிக மலர்
பக்தி மணம் கமழும்
புத்தகம் இணைப்பு
தினகரன் ஆன்மிக மலர்
சின்ன கண்ணன் அழைக்கிறான்
பேரருள் பொழியும் அம்பிகையின் ஸ்ரீநகரம்
ராஜயோகங்கள் அருளும் ஸ்ரீவித்யா ராஜகோபாலன்
பொருளையோ பதவியோ இழந்தாலும் மகிழ்ச்சி வரும் எப்படித் தெரியுமா?

கீரணத்தம் அரசு நடுநிலைப்பள்ளியில் மாதிரி வாக்குப்பதிவு நிகழ்ச்சி

கோவை, ஆக. 23: கோவையை அடுத்த சரவணம்பட்டி கீரணத்தம் அரசு நடுநிலை பள்ளியில், தேர்தல் மற்றும் வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு மற்றும் வாக்களிக்கும் இயந்திரத்தில் மாதிரி வாக்களிக்கும் செய்முறை நிகழ்ச்சி நேற்று நடந்தது. பள்ளி மாணவர்களிடையே வலுவான வாக்களிக்கும் கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும், முழு வாக்குப்பதிவு செயல்முறை குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, கோவை குடியிருப்போர் விழிப்புணர்வு சங்கம் அமைப்புடன் இணைந்து இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இப்பள்ளியின் பயிலும் 30 மாணவர்கள் போட்டியிட்டனர். 5 பேர் முதல்வர் பதவிக்கும், மற்றவர்கள் பல்வேறு கேபினட் அமைச்சர்கள் பதவிக்கும் போட்டியிட்டனர். இத்தேர்தலில் 241 மாணவர்கள் வாக்களித்தனர். உண்மையான தேர்தல் எப்படி நடக்கும் என்பதை பிரதிபலிக்கும் வகையில் இந்த செயல்முறை நடத்தப்பட்டது. பிரத்யேக வாக்குச்சாவடி உருவாக்கப்பட்டு, 4 வாக்குச்சாவடி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

இத்தேர்தலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்லும் வகையில், இந்த மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்பட்டது.

“கோவை மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவு செய்யவேண்டும் என்ற விழிப்புணர்வை பள்ளி மாணவர்களிடம் இருந்தே துவக்க வேண்டும் என்பதற்காக ‘ராக்’ அமைப்பு சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக இந்த மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்பட்டது” என ‘ராக்’ அமைப்பின் செயலாளர் ரவீந்திரன் கூறினார்.

pnb Housing
Finance Limited
Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A
அசையாச் சொத்து(கள்) மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு
பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு.

பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி–110 001 தொலைபேசி: 011–23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com
கோயம்புத்தூர் கிளை: பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் 1112, ராஜா பிளாஸா, இரண்டாவது தளம், லக்ஷ்மி மில் சந்திப்பு, கோயம்புத்தூர்–641037

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பினன்பி எச்எப்எல்)/ கடனீட்டு கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்– C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, “உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்” விற்பனை செய்யப்பட உள்ளது.
நாளது தேதிய திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி–8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்) மற்றும் கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றும் அதிகாரதாரர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பினன்பிஎச்எப்எல்), கடனீட்டு கடனீந்தோர் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை & நாள் (B)	சுவாதீனம் தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை(நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம்(H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
HOU/COI/0517/384750, கி.அ.: கோயம்புத்தூர், விக்னேஷ்பாபு S, அண்ணபூரணி R,	18.02.2022 தேதியன்று ரூ.28,91,866.5/-	கையக சுவாதீனம்	63 SP & 64 NP,0,அபிராமி கார்டன், எஸ்.எஃப்.எண்.404, 405, 415 & 416 கலங்கல் கிராமம் மற்றும் பஞ்சாயத்து , சூலூர் தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாடு–641402, இந்தியா	Rs. 3130000	Rs. 313000	26-09-2024	Rs. 10000	04-09-2024, நேரம்: காலை 11.00 மணி - மாலை 5.00 மணி	27-09-2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி - பிற்பகல் 2.00 மணி	இல்லை/ அறியப்படவில்லை
HOU/COI/1218/623255, கி.அ.: கோயம்புத்தூர் சதீஷ்குமார் K, புவனேஸ்வரி கண்ணன்	17.01.2023 தேதியன்று ரூ.16,13,842.6/-	கையக சுவாதீனம்	கண்ணபிரான் நகர், St 262/1, மனை எண்.31, பண்ணிமடை கிராமம், வடவள்ளி, கோயம்புத்தூர், தமிழ்நாடு–641017, இந்தியா	Rs. 2569000	Rs. 256900	26-09-2024	Rs. 10000	04-09-2024, நேரம்: காலை 11.00 மணி - மாலை 5.00 மணி	27-09-2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி - பிற்பகல் 2.00 மணி	இல்லை/ அறியப்படவில்லை
HOU/COI/0418/518844, கி.அ.: கோயம்புத்தூர் ராஜா S, சேகர் S	17.01.2023 தேதியன்று ரூ.490767.6541	கையக சுவாதீனம்	அட்டவணை சொத்து கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, வடவள்ளி கிராமம், பட்டா எண்.1157, எஸ்.எஃப். எண்கள்.109/1A நிலம் பரப்பளவு 1.59 ஏக்கர்கள், எஸ்.எஃப்.எண்.109/1B நிலம் பரப்பளவு 2.17 ஏக்கர்கள், எஸ்.எஃப்.எண்.120/1A2 நிலம் 1.04 ஏக்கர்கள் இந்த வடக்குப்பகுதி நிலம் பரப்பளவு 0.70 ஏக்கர்கள் மொத்தம் 4.46 ஏக்கர்கள் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுள்ளன. இதனை கோயம்புத்தூர் நகரமைப்பு திட்ட துணை இயக்குனர் Ma.Va.Co.Ma.எண்48/2009ன் கீழ் மற்றும் தலைவர், வடவள்ளி பஞ்சாயத்து மற்றும் பிபிசி அவென்யூவை அங்கீகரித்துள்ளார். இந்த ஒரு பாகத்தில் கிழக்குப் பகுதி மனை எண்.27 பின் வரும் எல்லைகள் மற்றும் அளவீடுகளைக் கொண்டுள்ளது. வடக்கு–30 அடி அகல கிழக்கு மேற்கு லேஅவுட்சாலை, தெற்கு–மனை எண்.21, கிழக்கு–மனை எண்.27ன் மேற்குப் பகுதி, மேற்கு–மனை எண்.26, இதற்கு நடுவில் கிழக்கு மேற்கு இருபுறமும் 20 அடி, வடக்கு தெற்கு இருபுறமும் 60 அடி, அளவீடு பரப்பளவு 1200 ச.அடி நிலம் மற்றும் லேஅவுட் சாலைகள் மீது வழக்கமான உரிமைகள் மற்றும் இதர வசதிகள் கொண்டுள்ளது. இந்த சொத்து எஸ்.எஃப்.எண்.109/1Bயில் உள்ளது.	Rs. 380000	Rs. 38000	11-09-2024	Rs. 10000	04-06-2024, நேரம்: காலை 10.00 மணி - மாலை 5.00 மணி	12-09-2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி - பிற்பகல் 2.00 மணி	இல்லை/ அறியப்படவில்லை
HOU/COI/1217/465212, கி.அ.: கோயம்புத்தூர் காளிதாஸ் K , ராஜேஸ்வரி R	18.02.2022 தேதியன்று ரூ.19,34,503.38/-	கையக சுவாதீனம்	20 Np & 21 Sp, 0, 0, ஆதிரா ஆர்கேட், எஸ்.எஸ்ஃப்.எண்.16/2, ஆனந்தம் அவென்யூ, கொண்டம்பாளையம் கிராமம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா–641110.	Rs. 1806000	Rs. 180600	26-09-2024	Rs. 10000	04-09-2024, நேரம்: காலை 11.00 மணி - மாலை 5.00 மணி	27-09-2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி - பிற்பகல் 2.00 மணி	இல்லை/ அறியப்படவில்லை
HOU/COI/0118/482376, கி.அ.: கோயம்புத்தூர் மனோகரன் R, சுகன்யா M	17.01.2023 தேதியன்று ரூ.25,38,102.60/-	கையக சுவாதீனம்	இனம் எண்:1 (ஆவண எண். 8553/2017) கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிக்கில்காரம்பாளையம் கிராமம், எஸ். எஃப்.எண்.143 பரப்பளவு 5.70 ஏக்கர்கள் நிலம், இதில் பரப்பளவு 1.79 ஏக்கர்கள் நிலம் லேஅவுட் ஆக சிவசக்தி நகர் திட்டம் 2 என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு 142/2011 ன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த லேஅவுட் எண்.16 பின் வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது. வடக்கு–30 அடி அகல கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, தெற்கு–எஸ்.எஃப்.எண்.121ன் நிலம், கிழக்கு–மனை எண்.15, மேற்கு–மனை எண்.17, அளவீடு கிழக்கு மேற்கு வடக்குப் பகுதி 30 அடி, கிழக்கு மேற்கு தெற்குப் பகுதி 30 அடி, வடக்கு தெற்கு கிழக்கு பகுதி 56 அடி 9 அங்குலம், வடக்கு தெற்கு மேற்கு பகுதி 55 அடி 6 அங்குலம், ஆகவே அளவீடு பரப்பளவு 1684 ச.அடி அல்லது 3 சென்ட்கள் 377 ச.அடி காலி மனை இத்துடன் பொது லேஅவுட் சாலைகளை உபயோகிக்கும் உரிமை மற்றும் இதர பயன்பாட்டு உரிமைகளைக் கொண்டுள்ளது. இனம் எண்:2 (ஆவண எண். 8555/2017) கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிக்கில்காரம்பாளையம் கிராமம், எஸ். எஃப்.எண்.143 பரப்பளவு 5.70 ஏக்கர்கள் நிலம், இதில் பரப்பளவு 1.79 ஏக்கர்கள் நிலம் லேஅவுட் ஆக சிவசக்தி நகர் திட்டம் 2 என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு 142/2011 ன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த லேஅவுட் எண்.17 பின் வரும் எல்லைகளைக் கொண்டுள்ளது. வடக்கு–30 அடி அகல கிழக்கு மேற்கு லேஅவுட் சாலை, தெற்கு–எஸ்.எஃப்.எண்.121ன் நிலம், கிழக்கு–மனை எண்.16, மேற்கு–மனை எண்.18, அளவீடு கிழக்கு மேற்கு வடக்குப் பகுதி 30 அடி, கிழக்கு மேற்கு தெற்குப் பகுதி 30 அடி, வடக்கு தெற்கு கிழக்கு பகுதி 57 அடி 9 அங்குலம், வடக்கு தெற்கு மேற்கு பகுதி 56 அடி 9 அங்குலம், ஆகவே அளவீடு பரப்பளவு 1718 ச.அடி அல்லது 3 சென்ட்கள் 411 ச.அடி காலி மனை இத்துடன் பொது லேஅவுட் சாலைகளை உபயோகிக்கும் உரிமை மற்றும் இதர பயன்பாட்டு உரிமைகளைக் கொண்டுள்ளது.	Rs. 3201000	Rs. 320100	11-09-2024	Rs. 10000	28-08-2024, நேரம்: காலை 11.00 மணி - மாலை 5.00 மணி	12-09-2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி - பிற்பகல் 2.00 மணி	இல்லை/ அறியப்படவில்லை

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட் அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோரூரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்ட வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. நாளது தேதிப்படி, நிரல் எண்.K இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பினன்பிஎச்எப்எல் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை.
2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பினன்பிஎச்எப்எல் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரம் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்–K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம் மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும்.
3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டு கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து/கடனீட்டுச் சொத்து மறுவிற்பனை செய்யப்படும்.
4. மனை எண்.68, மூன்றாவது தளம், செக்டார் 44, கூர்கயான், **ஹரியானா–122003** இல் கார்ப்பரேட் அலுவலகத்தைக் கொண்டுள்ள **M/s C1 இந்தியா பிரைவேட் லிமிடெட்** ஆனது மின்–ஏலம் மூலம் விற்பனை நடத்துவதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். இணையதளம் **www.bankeauctions.com**. சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் அனைத்து பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் பினன்பிஎச்எப்எல் அதிகாரப்பூர்வ நபர் **நவீன் R/ ப்ரீத்தி/ மருதுபாண்டியன், தொடர்பு எண்.: 9047973017/ 80667005160/8148101608** மூலம் PNBHFL அதிகாரப்பூர்வ நபரை தொடர்பு கொள்ள வேண்டும். அல்லது www.pnbhousing.com காணவும்.

இடம்: கோயம்புத்தூர், நாள்:- 23.08.2024 **அதிகாரப்பூர்வ அதிகாரி, M/s பினன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**